# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in

**முன்னிலை: திரு.ஆ.தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 103 /2016**

திரு. எஸ். இராமமூர்த்தி,
த/பெ சுப்பிரமணி,
23A, கொளத்தூர் கிராமம் மற்றும் அஞ்சல்,
வழி தொழுப்பேடு,
செய்யூர் வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம் . . . . மேல் முறையீட்டாளர்
(திரு. எஸ். ராமமூர்த்தி)

எதிர்

மேற்பார்வை பொறியாளர் ,
செங்கல்பட்டு மின்பகிர்மான வட்டம் ,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
130 ஜி.எஸ்.டி ரோடு(புதிய பேருந்து நிலையம் எதிரில்),
செங்கல்பட்டு – 603 001. . . . . . . எதிர்மனுதாரர்
(திரு. பி. சந்திரசேகரன், செயற்பொறியாளர்/அச்சிறுப்பாக்கம்)

**கேட்புரை நாள்: 16–3–2017**

**ஆணை நாள்: 24.3.2017**

திரு S.இராமமூர்த்தி, த/பெ சுப்பிரமணி, கொளத்தூர் கிராமம் மற்றும் அஞ்சல், செய்யூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம் அவர்களின் 21.12.2016 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.103/2016 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 16.3.2017 நாளில் நடைபெற்றது. மேல் முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள் எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினரும் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

**1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

(i) அவர் பெயரில் பெற்றுள்ள மின்இணைப்பு எண்.211ஐ அதே புலத்தில் மாற்றியமைக்க கட்டணம் எவ்வளவு செலுத்தவேண்டும்.

(ii) ஏற்கனவே ஒரு HP பெற்றவருக்கு இன்னும் இரண்டு HP தேவைப்பட்டால் அதற்கு எவ்வளவு டெபாஸிட் தொகை செலுத்த வேண்டும்.

(iii) மின்இணைப்பு பெறுவதற்கு மின்கம்பம் தேவைப்பட்டால் அதற்கு மனுதாரர் எவ்வளவு கட்டணம் செலுத்த வேண்டும்.

**2. வழக்கின் சுருக்கம்:**

2.1 மேல்முறையீட்டாளர் பத்தி 1ல் உள்ள தகவல்களை கோரி இளநிலைபொறியாளருக்கு 11.7.2016ல் ஒரு விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார்.

2.2 பொது தகவல் அதிகாரியிடமிருந்து (செயற்பொறியாளர், அச்சிறுபாக்கம்) அவருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.

2.3 அந்த தகவல்கள் அவருக்கு திருப்தியில்லாததால் மேல்முறையீட்டு அலுவலரிடம் 11.8.2016ல் மேல்முறையீடு செய்துள்ளார்.

2.4 மேல்முறையீட்டு அலுவலரும் 28.9.2016 நாளிட்ட கடிதத்தின் மூலம் பதில் வழங்கியுள்ளார்.

2.5 மேல்முறையீட்டாளர் செங்கல்பட்டு மின்பகிர்மான வட்டத்தின் மின்குறைதீர்க்கும் மன்றத்திற்கு மனு செய்துள்ளார். மேற்கண்ட கோரிக்கை மன்றத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு வரவில்லை என்பதால் மன்றம் மனுவை நிராகரித்து உத்தரவிட்டுள்ளது.

2.6 மேற்கண்ட தீர்வில் அதிருப்தியுற்ற மேல்முறையீட்டாளர் இந்த மேல்முறையீட்டை மின்குறைதீர்ப்பாளர் முன்பாக சமர்ப்பித்துள்ளார்.

3. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்:</u>

3.1 அவர் பெயரில் பெற்றுள்ள மின்இணைப்பு எண்.211–ஐ அதே புலத்தில் மாற்றியமைக்க கட்டணம் எவ்வளவு செலுத்த வேண்டும் எனக் கோரியும் ஒரு HP மின்இணைப்பு பெற எவ்வளவு செலுத்த வேண்டும் எனக் கோரியும், ஏற்கெனவே ஒரு HP பெற்றவருக்கு இன்னும் இரண்டு HP தேவைப்பட்டால் அதற்கு எவ்வளவு டெபாசிட் தொகை செலுத்த வேண்டும் எனக் கோரியும் மின்இணைப்பு பெற மின் கம்பம் தேவைப்பட்டால் அதற்கு மனுதாரர் எவ்வளவு கட்டணம் செலுத்த வேண்டும் எனக் கோரியும் 11.7.2016 அன்று அச்சிறுப்பாக்கம் மின்சார வாரிய இளநிலை பொறியாளர் பொது தகவல் வழங்கும் அலுவலர் அவர்களுக்கு விண்ணப்பமும் மேல்முறையீட்டு அலுவலர் அவர்களுக்கு 11.8.2016 அன்று மேல்முறையீடும் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற தலைவர் அவர்களுக்கு 2.11.2016 அன்று மனு கொடுத்துள்ளார்.

3.2 அம்மனு மீது மின் நுகர்வோர் குறைதீர்க்க மன்ற தலைவர் செங்கல்பட்டு அவர்களால் மனுதாரரின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் விதிமுறைகளுக்குட்பட்டு வரவில்லை என்று நிராகரிக்கப்பட்டுள்ளது.

3.3 மனுவில் எவ்வகை குறைபாடுகள் இருப்பினும் மனுதாரரை மன்னித்து ஒட்டுமொத்த அலுவலர்கள் வழங்கிய தகவல்களை பரிசீலனை செய்து மனுதாரரின் கோரிக்கைக்கேற்ற பதில் பெற்று வழ ங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

4. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள்:</u>

4.1 பொது தகவல் அலுவலர் மற்றும் செயற்பொறியாளர்/இப/அச்சிறுப்பாக்கம் அவர்கள் தகவல் அறியும் உரிமைச் சட்ட முறைப்படி மனுதாரர் கோரிய தகவல்களுக்கு 8.8.2016 தேதியிட்ட கடிதம் மூலம் பதில் அளித்துள்ளார். அதன் விபரம் கீழ்வருமாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

(i) விண்ணப்பத்துடன் உடமைகளின் சான்றிடப்பட்ட நகல்களான விற்பனை ஒப்பாவணம்/பிரிவினை ஒப்பாவணம்/பரிசு ஒப்பந்தம்/ஒதுக்கீடு கடிதம் / கணினி பட்டா/வருவாய்த்துறை அதிகாரிகளால் வழங்கப்பட்ட உரிமைப்பத்திரங்கள்/நீதிமன்ற தீர்ப்பு அல்லது சொத்து வரி ரசீது நத்தம் புறம்போக்கு எனில் உரிய வருவாய்துறை அலுவலரிடமிருந்து பெறப்பட்ட மறுப்பின்மை சான்றிதழ் மற்றும் பிணையுறுதி பத்திரம்.

(ii) விண்ணப்பிக்கும் இடத்தின் தன்மை, மின்பளு மற்றும் தேவைப்படும் மின் வீதப்பட்டி ஆகியவற்றை பொறுத்து மின்இணைப்பு காப்புத்தொகை செலுத்த வேண்டும். மின்இணைப்பு பெற பதிவு செய்த நாளில் இருந்து மின் விஸ்தரிப்பு வேலை ஏதும் இல்லாமல் இருந்தால் 30 நாட்களுக்குள்ளும் மின் விஸ்தரிப்பு வேலை இருந்தால் 60 நாட்களுக்குள்ளும் மின்மாற்றி மற்றும் உயரழுத்த மின் வேலை இருந்தால் 90 நாட்களுக்குள்ளும் மின் இணைப்பு வழங்கப்படும் . எந்த மின்வாரிய அதிகாரிகளுக்கும் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை.

(iii) மின் இணைப்பு பெறுவதற்கு கம்பம் தேவைப்பட்டால் அந்தக் கம்பம் விண்ணப்பதாரருக்கு சொந்தமான இடத்தில் அமைவதாக இருந்தால் மட்டும் (விவசாய மின்இணைப்பு நீங்கலாக) எத்தனை கம்பங்கள் தேவைப்படுகிறதோ அதற்கேற்ப மதிப்பீட்டு தொகை மாறுபடும். எந்த வீதப்பட்டியல் கூடுதல் மின்பளு தேவை என்பது தெளிவாக குறிப்பிட இல்லை. ஏற்கனவே பெற்ற மின்இணைப்பை அதே காம்பவுண்டுக்குள் 10 அடி தள்ளி அமைக்க பதிவு கட்டணம் ரூ.50 மீட்டர் பெட்டி மாற்று கட்டணம் ரூ.150 மறு மின்இணைப்பு கட்டணம் ரூ.60 சோதனை கட்டணம் ரூ.75 ஆகியவை செலுத்த வேண்டும்.

4.2 மனுதாரரின் மேல்முறையீட்டு மனு, செயற்பொறியாளர்/இப/அச்சிறுப்பாக்கம் அவர்களால் மத்திய அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு மேல்முறையீட்டு அலுவலர் மற்றும் மேற்பார்வை பொறியாளர்/செங்கை மின்பகிர்மான வட்டம் செங்கல்பட்டு அவர்களால் மனுதாரருக்கு

28.9.2011 நாளிட்ட கடிதம் மூலம் பதில் அளிக்கப்பட்டுள்ளது. விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

(i) பொது தகவல் (ம) செயற்பொறியாளர்/இப/அச்சிறுப்பாக்கம் அவர்களின் 8.8.2016ல் பதில் கடிதம் அலுவலக நடைமுறைகளின்படியானது. அக்கடிதத்தில் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் பொருத்தமானவை 11.7.2016 நாளிட்ட தங்களின் விண்ணப்பத்தின் ஒவ்வொரு பத்திக்கும் பொருத்தமான தகவல்கள் பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்டுள்ளது.

(ii) 11.7.2016 நாளிட்ட மனுவில் கூடுதல் மின்பளு தேவைப்படும் வீதப்பட்டி குறிப்பிடாததால் டெபாசிட் தொகை எவ்வளவு செலுத்தவேண்டும் என்ற தகவலை பொதுத் தகவல் அலுவரால் வழங்க இயலவில்லை.

(iii) அனைத்து தகவல்களும் பொருத்தமானவை தங்களின் 11.7.2016 நாளிட்ட விண்ணப்பத்தின் மீதான தகவல்கள் அல்லது கூடுதல் தகவல்களை மேல்முறையீட்டு விண்ணப்பத்தின் கோர இயலாது.

(i) தங்களின் 11.7.2016 நாளிட்ட விண்ணப்பத்தின் மீதான தகவல்கள் அல்லது கூடுதல் தகவல்களை மேல்முறையீட்டு விண்ணப்பத்தில் கோர இயலாது.

4.3 மனுதாரரான திரு. சு. இராமமூர்த்தி செய்யூர் வட்டம் அவர்கள் மறுபடியும் ஏற்கனவே கேட்ட விவரங்களை தொகுத்து தலைவர் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் அவர்களுக்கு 2.11.2016 நாளிட்ட கடிதம் மூலமாக சமர்ப்பித்துள்ளார். மேற்கண்ட மனுவிற்கு கீழ்கண்டவாறு விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனுதாரருக்கு தாங்கள் கேட்கும் விவரங்கள் யாவும் தகவல் அறியும் உரிமைச்சட்ட வரம்பிற்குள் உட்பட்டதாகும். எனவே, அதற்கு ஏற்கனவே பொதுத் தகவல் அலுவலர் மற்றும் செயற்பொறியாளர்/இப/அச்சிறுப்பாக்கம் அவர்களால் மேல்முறையீட்டு அலுவலர் அவர்கள் மூலமாகவும் பதில் அளிக்கப்பட்டுள்ளது எனவும், எனவே, நுகர்வோர்

குறைதீர்க்கும் மன்ற விதிகளுக்கு உட்பட்டு வராததால் மனுதாரரின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது என தெளிவாக பதில் அளிக்கப்பட்டுள்ளது.

4.4 தற்போது மனுதாரர் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் மேல்முறையீட்டு மனுவை சமர்ப்பித்துள்ளார். மேலும் சமர்ப்பித்த மனுவை ஆய்வுசெய்த போது தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் மூலம் வினவிய விவரங்களையே மீண்டும் சமர்ப்பித்துள்ளார். மேலும் எந்த வீதப்பட்டி எனவும் குறிப்பிடவில்லை. இந்நிலையில் மனுதாரரால் மீண்டு தகவல் அறியும் உரிமைச் சட்ட மனுவில் கோரியதே கேட்டுள்ளார் எனவும் மனுதாரருக்கு எந்த விவரங்கள் தேவை அவருடைய நோக்கம் என்ன, என்பது தெரியாமல் உள்ளது. எனவே, மனுதாரருக்கு அனைத்து சந்தர்ப்பங்களும் வழங்கப்பட்டுவிட்டன என சமர்ப்பிக்கப்படுகிறது.

## 5.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை:</u>

5.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக மின்குறைதீர்ப்பாளர் முன்பாக 16.3.2017 அன்று கேட்புரை நடைபெறும் என்று அறிவிப்பு வழங்கப்பட்டது.

5.2 மேல்முறையீட்டாளர் திரு. எஸ். இராமமூர்த்தி அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

5.3 எதிர்மனுதாரரின் சார்பில் திரு. பி. சந்திரசேகரன், செயற்பொறியாளர், அச்சிறுப்பாக்கம் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

6. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

6.1 மேல்முறையீட்டாளர் கேட்புரை நாளில் தன்னுடைய மனுவிலுள்ள வாதங்களையே மீண்டும் வலியுறுத்தினார்.

6.2 எதிர்மனுதாரரின் பிரதிநிதியும் எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

6.3 மேலும், மின்இணைப்பை மாற்றி அமைக்கஆகும் மதிப்பீட்டு தொகையை மாற்றியமைக்க கோரும் நுகர்வோர்தான் செலுத்தவேண்டும் என்றும், மதிப்பீட்டு தொகை மின் வழங்கல் விதித்தொகுப்பின் விதிப்படி கணக்கீடு செய்யப்படும் என்றும் தெரிவித்தார். டெபாஸிட் தொகை என்பது, மின் வீதப்பட்டி மற்றும் தேவைப்படும் பளுவிற்கு தகுந்தாற்போல் வசூல் செய்யப்படும் என்றும் தெரிவித்தார். மேலும், எந்த நிலையில் மின் கம்பங்களுக்கும், மின் பாதைக்கும் நுகர்வோரிடம் மதிப்பீடு கட்டணம் வசூல் செய்யப்படும் என்பதையும் விவரித்தார். மேற்கண்ட நிலையில் மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள தகவல்களை மட்டும் கருத்தில் கொண்டு செலுத்த வேண்டிய கட்டணங்களை நிர்ணயம் செய்ய முடியாது என்றும் மேல்முறையீட்டாளர் அவரின் கோரிக்கைகளுக்குரிய விண்ணப்பத்தை சமர்ப்பித்தால் உரிய நடவடிக்கை எடுத்து கட்டண விபரம் அளிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

6.4 எதிர்மனுதாரரின் பிரதிநிதி மனுதாரர் கோரிய தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தெரிவிக்க வேண்டிய தகவல்கள் ஏற்கனவே வழங்கப்பட்டுவிட்டன என்றும் வாதிட்டார்.

6.5 இந்த மனுதாரர் அவரின் கோரிக்கையாக சில தகவல்களை கோரியுள்ளார். அந்த தகவல்கள் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கோரப்பட்டு ஏற்கனவே பொதுத்தகவல் அதிகாரியால் 8.8.2016 நாளிட்ட கடிதத்தில் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், மேல்முறையீட்டிற்கு மேல்முறையீட்டு அலுவலரும் 28.9.2016 நாளிட்ட கடிதம் மூலம் பதில் அளித்துள்ளார்.

**6.6** இந்த வழக்கில் மேல்முறையீட்டாளரின் கோரிக்கைகளாக தெரிவிக்கப்பட்டுள்ள தகவல்கள் ஒரு நுகர்வோரின் முறையீடாக எடுத்துக் கொள்ள முடியுமா என்பதை முதற்கண்ட ஆராய வேண்டும். எனவே, மின் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதித்தொகுப்பின் விதி 2(f)ஐ ஆராய விரும்புகிறேன். அந்த 2(f) விதித்தொகுப்பில் உள்ளவாறு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*" 2(f) "complaint" means any grievance made by a complainant in writing on:-*
*(i) defect or deficiency in electricity service provided by the licensee;*
*(ii) unfair or restrictive trade practices of licensee in providing electricity services;*
*(iii) Charging of a price in excess of the price fixed by the Commission for consumption of electricity and allied services;*
*(iv) Electricity services which will be unsafe or hazardous to public life in contravention of the provisions of any law for the time being in force.."*

**6.7** மேற்கண்ட முறையீடு என்பதன் பொருள் விளக்கத்தை கூர்ந்து ஆராய்ந்து பார்க்கும்பொழுது முறையீடு என்பது ;

(i) உரிமம் பெற்றவரால் அளிக்கப்படும் மின்சாரப் பணிகளில் உள்ள குறைபாடு அல்லது குறைவு,

(ii) மின்சார பணிகள் உரிமம் பெற்றவர் செய்யும் நியமற்ற அல்லது கட்டுப்படுத்தப்பட்ட தொழில் பழக்கம்,

(iii) மின்சார பயன்பாடு மற்றும் தொடர்புடைய பணிக்கு ஆணையம் நிர்ணயித்த கட்டணத்தைவிட அதிகம் கேட்பது மற்றும்,

(iv) தற்பொழுது நடைமுறையிலுள்ள சட்டங்களுக்கு எதிராக பொது வாழ்க்கைக்கு பாதுகாப்பற்றதும் இடர் அளிக்கக்கூடியதுமான மின்சாரப் பணிகள்,

**6.8** இந்த மேல்முறையீட்டாளரின் கோரிக்கைகள் மேற்கண்ட பத்தியில் தெரிவிக்கப்பட்டுள்ள முறையீடு என்ற பொருள் விளக்கத்தின்படி உள்ள குறைகளாக இல்லை. அவைகள் தகவலறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் கோரும் தகவல்களாகத்தான் உள்ளன. எனவே, மேல்முறையீட்டாளரின் மேற்கண்ட முறையீட்டு மனுவை மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும்

மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி ஒரு முறையீடாக வரையறுக்க முடியாது என்பதால் மனு தள்ளுபடி செய்யப்படுகிறது என்று தீர்வு செய்யப்படுகிறது.

## 7. முடிவுரை

7.1 மேல்முறையீட்டாளரின் கோரிக்கைகள் தகவல் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரும் தகவல்களாக உள்ளதாலும் மின்சார குறைதீர் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி அவரின் மேற்கண்ட கோரிக்கைகள் முறையீடு என்ற வரையறைக்குள் இல்லாததாலும் மேல்முறையீட்டு மனு எண்.103/2016 தள்ளுபடி செய்யப்படுகிறது என்று தீர்வு செய்யப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. எஸ். இராமமூர்த்தி,
த/பெ சுப்பிரமணி,
23A, கொளத்தூர் கிராமம் மற்றும் அஞ்சல்,
வழி தொழுப்பேடு,
செய்யூர் வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

2) மேற்பார்வை பொறியாளர் ,
செங்கல்பட்டு மின்பகிர்மான வட்டம் ,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
130 ஜி.எஸ்.டி ரோடு(புதிய பேரூந்து நிலையம் எதிரில்),
செங்கல்பட்டு – 603 001.

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர் ),
மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
செங்கல்பட்டு மின்பகிர்மான வட்டம் ,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
130 ஜி.எஸ்.டி ரோடு(புதிய பேரூந்து நிலையம் எதிரில்),
செங்கல்பட்டு – 603 001.

4)  தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.